**செய்தி வெளியீடு எண் : 156** **நாள் : 08.03.2013**

**பத்திரிக்கைக் குறிப்பு**

**கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் "2 வாங்கினால் 1 இலவசம்" திட்டம் மீண்டும் அறிமுகம்**

– – –

**"கோ–ஆப்டெக்ஸ்"** என்று அனைவராலும் அழைக்கப்படும் "தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம்" தனது கடந்த 78 ஆண்டு கால சேவையில், தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களின் வாழ்வு மேம்பட பல்வேறு முயற்சிகள் எடுத்ததன் விளைவாக, தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரம் மேம்பாடு அடைந்துள்ளதுடன், வாடிக்கையாளர்களுக்கும் சிறந்த சேவை புரிந்து வருகிறது. வாடிக்கையாளர்கள் வழங்கி வரும் பேராதரவின் காரணமாக, விற்பனையில் பல்வேறு சாதனைகளை படைத்து வந்துள்ளது.

**2 வாங்கினால் 1 இலவசத் திட்டம்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களது சீரிய ஆலோசனையின்படி,
கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம், முதன் முறையாக, கடந்த ஆண்டு 17.03.2012 முதல் 02.04.2012 வரை **"2 வாங்கினால் 1 இலவசம்"** என்கிற உன்னதத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தியது.

இத்திட்டம், கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் வாடிக்கையாளர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றதுடன், அதிக எண்ணிக்கையிலான புதிய வாடிக்கையாளர்களையும் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களுக்கு ஈர்த்துள்ளது.

இதன் காரணமாக, இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட 17 தினங்களில், கோ–ஆப்டெக்ஸ் வரலாற்றிலேயே இதுவரை இல்லாத அளவிற்கு, ரூ.34.84 கோடி மதிப்பிற்கு, சில்லரை விற்பனை நடைபெற்று சாதனை படைத்துள்ளது.

இந்த சாதனை விற்பனையைத் தொடர்ந்து, நடப்பு ஆண்டிலும் **"2 வாங்கினால் 1 இலவசம்"** என்கிற இந்த சிறப்பான விற்பனைத் திட்டத்தினை, 01.03.2013 முதல் 25.03.2013 வரை, 25 தினங்களுக்கு, கோ–ஆப்டெக்ஸ் தனது 203 விற்பனை நிலையங்களிலும் அமுல்படுத்த திட்டமிட்டுள்ளது.

இச்சிறப்புத் திட்டம் ரொக்க விற்பனை மற்றும் அரசு ஊழியர்களுக்கு கடன் விற்பனை ஆகியவற்றிற்கு மட்டுமே பொருந்தும்.

இந்தத் திட்டத்தின் விற்பனை துவக்க நிகழ்ச்சி, சென்னை தலைமைச் செயலகத்தில் இயங்கிவரும் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் 08.03.2013 அன்று காலை 10.00 மணி அளவில் நடைபெற்றது.

**கோ–ஆப்டெக்ஸ்**

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**